# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 30. வாணிபங்கள் (பொது)

**விளக்கம்** - இந்த பிரிவு பல்வேறு வகையான வாணிபங்களைக் குறிக்கிறது: ஆடையகங்கள், தொலைத்தொடர்பகங்கள் மற்றும் பொத்தகசாலைகள்.

***பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்***

***இயக்குனர்/உரிமையாளர்/ வேலை வழங்குனர்***

- சேவைகளை வழங்க ஆரம்பிப்பதற்கு முன்னதாக, முகக்கவசங்கள் தொற்றுநீக்கிகள் போன்ற தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்கும் வழங்கல்களை தேவையான அளவு சேமிப்பில் வைத்திருப்பதுடன் , தேவைக்கேற்ப குறைந்தபட்ச எண்ணிக்கையிலான ஊழியர்களைப் பணியில் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடுங்கள்.
- வாணிபங்களை திறப்பதற்கு முன், வளிப்பதனாக்கிகளை முழு நாளும் இயக்கவும், அதன் வடிகட்டிகளைச் சுத்தம் செய்யவும் / கழுவவும்.
- இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கூரை விசிறி தகடுகளை சுத்தம் செய்யுங்கள்.
- நுழைவாயிலில் வெப்பநிலை கண்காணிப்பு முறையை நடைமுறைப்படுத்துவதும் கை தூய்மிப்பானை வழங்குவதும் பரிந்துரைக்கப்படுகிறது .
- ஊழியர்கள் தமது சுயபாதுகாப்பை உறுதி செய்து கொள்வதுடன் முகக்கவசங்களை அணிந்து கொள்ள வேண்டும். கைச் சுகாதாரம் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதுடன் தும்மும் போது மெல்லிழைத் தாளினால் அல்லது முழங்கையினால் மூக்கினையும் வாயினையும் மறைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையையும் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் தேவைப்படும்போது அவர்களுக்கு தகுந்த மருத்துவ ஆலோசனையைப் பெறும் செயல்முறையையும் பின்பற்றுங்கள் வாடிக்கையாளர்களில் முகக்கவசம் இல்லாதவர்கள் நுழைவாயிலில் முகக்கவசத்தினைப் (பணம் செலுத்திப்) பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். முகக்கவசம் இல்லாமல் உள்ளே செல்ல எவரையும் அனுமதிக்காதீர்கள்.
- வளாகத்தின் வெளிப்புறத்தில் வாடிக்கையாளர்கள் அவர்களது முறை வரும்வரை போதிய உடல் இடைவெளி பேணும் வகையில் ஒவ்வொருவரும் காத்திருக்க வேண்டிய இடங்கள் அடையாளமிடப்பட கூடம் ஒன்றினை;; பேணுவதுடன் அக் கூடமானது வெயில் மற்றும் மழையிலிருந்து போதிய பாதுகாப்பினை வழங்க வல்லதாகவும் அமைக்கப்பட வேண்டும்.
- மக்களின் வருகையினைக் குறைப்பதுடன் விற்பனை நிலையத்தினுள் வாடிக்கையாளரது எண்ணிக்கையைக் குறைவாகப் பேணவும் - எத்தனை வாடிக்கையாளர்கள் உள்நுழையலாம் என்ற விபரங்கள் வாயிலில் காட்சிப்படுத்தப்படலாம்.
- காற்றோட்டத்தினை சீராகப் பேணவும். வளிப்பதனாக்கியின் சாதாரணமான இயக்கத்தினை உறுதிப்படுத்தவும். சுத்தமான காற்றோட்டத்தை அதிகரிக்கவும்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் பொருட்கள்/மேற்பரப்புகளான கதவு மற்றும் குளிரூட்டிகளது கைப்பிடிகள், பொருட்கூடைகளது கைபிடிகள் ( *shopping basket/cart handles* ) , காட்சிப்படுத்தும் சாளரங்கள் மற்றும் எண்ணகங்கள் போன்றவற்றை சுத்தம் செய்து தொற்றுநீக்குக.
- விற்பனைப் பொருட்களில் தொடுவதை கூடியளவு தவிர்ப்பதற்கு வாடிக்கையாளர்களை ஊக்குவியுங்கள்.
- கதவுகளைத் தொடும் சந்தர்ப்பங்களைக் குறையுங்கள்–வளிப்பதனாக்கிகள் இல்லாத வாணிபங்களில் கதவுகளைத் திறந்தே வைத்திருங்கள் அல்லது நுழையும் / வெளியேறும் கதவைத் திறந்து மூடுவதற்காக ஒரு ஊழியரைக் குறித்து ஒதுக்குங்கள்.
- வாடிக்கையாளர்கள் பணம் செலுத்துவதற்கும் வெளியேறுவதற்கும் வரிசையில் காத்திருக்கும் போது தமக்கிடையே பாதுகாப்பான இடைவெளியினை பேணவேண்டும் என்பதனை நினைவுபடுத்தும் பொருட்டு 'வரிசையில் ஒரு மீற்றர் இடைவெளி' (வரிசையில் நபர்களுக்கு இடையில் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு காத்திருப்பதற்கான) விட்டுத் தரையில் அடையாளங்கள் இடப்பட வேண்டும்.
- மின்தூக்கி ஒன்று இருந்தால், பாதுகாப்பான தூரத்தை பராமரிக்க ஒரு நேரத்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க தரையில் உள்ள இடங்களைக் குறிக்கவும்

- உறுதிப்படுத்தப்பட்ட கோவிட் -19 நோயாளி கண்டறியப்பட்டால், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினது குழுவின் வழிகாட்டல்களின் கீழ் வளிப்பதனாக்கும் தொகுதிகள் மற்றும் காற்றோட்டத் தொகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டுத் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும். அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரியினால் சுகாதார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை அவற்றினை மீள இயக்கக்கூடாது.
- உயர் மற்றும் மத்திம ஆபத்துள்ள (*high and medium risk* ) பகுதிகளில், வாணிபங்கள் தங்களது வணிக நேரத்தை நிலைமைக்கேற்ப அமைத்துக் கொள்ளவும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது.
- சாத்தியம் எனில் இணையவழிக் கொள்வனவு மேற்கொண்டு பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் அல்லது வாணிபத்தில் வந்து பெற்றுச் செல்லும் (*pick up*) முறையையும் ஊக்குவிக்கவும். அவ்வாறு வந்து பெற்றுச் செல்வதற்காகத் தனியான வழங்கல் முகப்பிடம் ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம் காத்திருப்பு நேரத்தையும் பிற வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளையும் குறைக்க ஏற்பாடு செய்யப்படலாம்.
- பணமில்லா பரிவர்த்தனைகளை முடிந்தவரை ஊக்குவிக்கவும். கடன் / இலத்திரனியல் அட்டைகள் மூலம் பணம் செலுத்திய பின்னர் கையொப்பம் இடுவதற்கான எழுது கோலினை ஒவ்வொரு வாடிக்கையாளரும் பயன்படுத்திய பின்னர் தொற்றுநீக்கம் செய்யவும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பயனாளர் / வாடிக்கையாளர் / எமக்கு**

- கோவிட் நோய்த்தொற்றைத் தடுக்க பொதுவான வழிகாட்டல்களைப் பின்பற்றவும்: மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும், தேவைக்கு ஏற்றவாறு முகக்கவசங்களைப் பயன்படுத்தவும், கிரமமாகக் கை கழுவுவதுடன் சுவாச நற்பழகக்களைப் பின்பற்றவும்.
- இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் நிகழ்நிலை கொள்வனவு (*online shopping*) முறையினைப் பயன்படுத்துவதோடு நிகழ்நிலைப் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளவும்.
- வாங்கவேண்டிய பொருட்களை முன்னதாகவே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இதன்மூலம் விற்பனை நிலையத்தில் செலவு செய்ய வேண்டிய நேரத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். இயலுமாயின் நீங்கள் வாங்கவுள்ள பொருட்களின் பட்டியலை விற்பனை நிலையத்திற்கு முன்கூட்டியே அனுப்புவதன் மூலம் அவற்றைத் தயாராக வைத்திருக்கும்படி செய்யலாம். அடிக்கடி பொருட்கொள்வனவு செய்யச் செல்வதனைத் தவிர்க்கவும்.
- சனநெருக்கடி கூடிய வாணிபங்களினுள் செல்வதைத் தவிர்க்கவும்.
- பணத்தைக் கையாளுவதைக் குறையுங்கள். முடிந்தவரை சரியான தொகையினை வழங்குவதற்கு முயற்சிக்கவும்.
- பொதுவான மேற்பரப்புகளைத் தொடுவதைக் குறைக்கவும் – கதவு கைப்பிடிகள், காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கள் /எண்ணகங்கள், கையொப்பமிட பயன்படுத்தப்படும் எழுதுகோல்கள்.
- வரிசையில் நிற்கும்போது, உங்களுக்கு முன்னும் பின்னும் நிற்பவர்களில் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணுவதனை உறுதிப்படுத்துக.

அறிவுறுத்தும் முறைகள்

- வாணிப நுழைவாயிலில் சுவரொட்டிகள் / தகவல் பலகைகள் ஊடாக உடல் ரீதியான இடைவெளி, முகக்கவசம் அணிவது, நுழைவதற்கு முன் கைகளை கழுவுதல், ஒரு தடவையில் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுபவர்களது எண்ணிக்கை ஆகிய தகவல்கள் காட்சிப் படுத்தப்பட வேண்டும்.
- இது சமூக ஊடகங்கள் மற்றும் பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் வழியாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படலாம்.
- வாணிப உரிமையாளர்களும் வாடிக்கையாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான நடைமுறைகள் குறித்துப் பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் வழியாகத் தெரியப்படுத்தலாம்.



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020